Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 114/ 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.10**

| | | | |
|---|---|---|---|
| Name: | நாகராஜ் | Calling: | கிராம உதவியாளர்(ஓய்வு) |
| Father's Name: | முத்து | Religion: | இந்து |
| Village: | நியூடவுன் | Age: | 65 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 09.08.2024

SIGN :

(1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 10 முதன்மை விசாரணை

2015ம் வருடம் அம்பூர்பேட்டை கிராமத்தில் கிராம உதவியாளராக பணியில் இருந்தேன். தேதி நினைவில்லை, கோணாமேடு பஸ் நிலையத்தில் நகர போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். நானும் தேவஸ்தானம் கிராம உதவியாளர் திரு. மகேந்திரனும் அந்த வழியாக சென்று கொண்டிருந்தபோது ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அதற்கு முன் தினம் பஜாரில் யாரோ ஒரு நபரை கத்தியால் குத்தி விட்டதாக விசாரணையில் தெரியவந்தது. அந்த வாகனம், வாகனத்தின் உறையிலிருந்து கத்தி, துணிகளை போலிசார் எடுத்து கொண்டார்கள். அங்கேயே கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணன் மற்றும் மாபு ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தில்

உள்ள முதலாவது கையொப்பங்கள் மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது தான். **(எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணன் மற்றும் மாபு ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பங்கள் அசாஆ 5 மற்றும் அசாஆ 6 மற்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றிய கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள முதலாவது கையொப்பங்கள் அசாஆ 7 மற்றும் அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி போலிசார் விசாரித்த நபர்களை தற்போது 10 வருடம் ஆகிவிட்டதாலும், கண்பார்வை மங்கி விட்டதாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

கோணாம்பேட்டை பஸ் நிலையத்திடம் நான் போனதால் போலிசார் அங்கு என்னை விசாரித்தனர். போலிசார் என்னிடம் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு தாளில் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். யாரிடமிருந்து பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள், அவர்கள் யாரை என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். எதற்காக 4 கையொப்பம் இட்டேன் என்றால் மகசர்களில் உள்ள 2 கையொப்பமும், அவர்களிடம் விசாரித்த வாக்குமூலத்தில் 2 கையொப்பமும் செய்தேன் என்றால் சரிதான்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) நாகராஜ்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No.114/ 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.11**

| | | | |
|---|---|---|---|
| Name: | லூர்து ஜெயராஜ் | Calling: | உதவி ஆய்வாளர் |
| Father's Name: | சாலமன் | Religion: | கிறிஸ்டியன் |
| Village: | துரைப்பாடி | Age: | 57 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 09.08.2024

SIGN :

(1ம் எதிரி ஆஜரில்லை. 1ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 11 முதன்மை விசாரணை

நான் தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டு உள்ளேன். நான் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் 22.08.2015ம் தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு உதவி ஆய்வாளராகிய நான் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த நாராயணன், வயது 53, த/பெ.ஈஸ்வரன் என்வரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று அதன்தன்மைகேற்ப வாணியம்பாடி நகர காவல் நிலைய குற்ற எண் 295/2015 சட்டப்பிரிவுகள் 147, 148, 452, 307 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் வாக்குமூலம் அசாஆ 9 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து

நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 22.08.2015ம் தேதி 16.45 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு 19.00 மணி வரை வரைபடம் வரைந்து சாட்சிகள் கார்த்திக், வயது 36, த/பெ. மாணிக்கம், பெருமாள் கோவில் தெரு, பெருமாள்பேட்டை, வாணியம்பாடி மற்றும் சுப்ரமணி, வயது 57, த/பெ இளங்கோராவ், கண்ணாமடம் தெரு, வாணியம்பாடி ஆகியோர் பார்வை மகசர் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 11 மற்றும் அசாஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் நாராயணன், கோபி, வெங்கடேஷ், சுபேல், உஷாபாய், கார்த்திக், சத்திய நாராயணன் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட இரண்டு நபர்கள் பாலா மற்றும் மகபூப் என்பவர்களை மற்றும் தலைமறைவாக உள்ள எதிரி அக்பர் மற்றும் இச்சம்பவத்திற்கு உறுதுணையாக இருந்த இளங்கோவின் இளைய மகன் சிவா மற்றும் இளங்கோவின் தம்பி ஸ்ரீதர் மகன் சரவணன் ஆகியோர்கள் தான் இச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள். நேரில் பார்த்த சாட்சிகளை விசாரித்தேன். எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் கிடைக்காததால் தக்க புலன் வைத்து நிலையம் வரப்பட்டது. மேலும் இவ்வழக்கில் எதிரியை தேடி அம்பூர்பேட்டை, கோணாமேடு ஆகிய இடங்களில் சென்றோம். கோணாமேடு பஸ் நிலையத்தில் போலிஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது 22.08.2015ம் தேதி காலை அவ்வழியாக வந்த ஹீரோ ஹோண்டா வாகனத்தில் வந்த இருவரை விசாரித்தபோது அவர்கள் இருவரும் முன்னுக்கு பின் முரணாக தங்கள் பெயர் விலாசத்தை கூறியதால் அவர்களை தீர விசாரித்ததில் இவ்வழக்கில் கண்டவாறு சம்பவத்தின் தொடர்பாக குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை காலை 07.00 மணிக்கு கைது செய்வதற்கான காரணத்தை கூறியும், அவர்களது உறவினர்களுக்கு தகவல் கூறியும் கைது செய்து 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனை 23.08.2015ம் தேதி காலை 07.00 மணி முதல் 07.45 மணிவரை அவ்வழியாக வந்த கிராம உதவியாளர் திரு. நாகராஜ் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனை தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **(1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதே இடத்தில் அதே நாள் காலை 07.45 மணிக்கு டி என் 23 பி ஆர் 1770 என்ற ஹீரோ ஹோண்டா ஸ்ப்ளெண்டர் வாகனம் மற்றும் வாகனத்தின்

டேங்க் கவரில் இருந்த ரத்த கறை படிந்த வெள்ளை நிற சட்டை ஒன்று, சுமார் 24 செ.மீ நீளமுள்ள கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று கைப்பற்றினேன். (**கைப்பற்றுதல் மகசர் அசாஆ14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பின்னர் 2ம் எதிரி மகபூப் என்பவரிடம் அதே இடத்தில் 08.15 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். (**2ம் எதிரி மகபூப் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அதே இடத்தில் அதே நாள் காலை 09.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 24 செ.மீ நீளமுள்ள உருளை கட்டை பிடி போட்ட கத்தி ஒன்றை கைப்பற்றினேன். (**கைப்பற்றுதல் மகசர் அசாஆ16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை 2 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி கொண்டேன். (**படிவம் 91 முறையே அசாஆ17 மற்றும் அசாஆ18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் நான் வழக்கில் கைப்பற்றிய வாகனம் ஆகும். (**இந்த இருசக்கர வாகனத்தின் புகைப்படம் அசாஆ19( எண்ணிக்கை 3) ஆகவும், சிடி அசாஆ20 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**) (**ரத்த கறை படிந்த சட்டை சா.பொ.1 ஆகவும், சுமார் 24 செ.மீ நீளமுள்ள கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று சா.பொ.2 ஆகவும், சுமார் 24 செ.மீ நீளமுள்ள உருளை கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

சாட்சிகள் நாகராஜ், மகேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் வழக்கு கோப்பை மேற்கட்ட புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சந்திரசேகரன் பார்வைக்கு வைத்து கொண்டேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

அசா1 மற்றும் அசா2 நடந்த சம்பவத்தை மிகைப்படுத்தி கூறிவிட்டதாக காவல் நிலையத்தில் வாக்குமூலம் அளித்திருக்கிறார்களா என்றால் இல்லை. நான் அவர்களை விசாரிக்கவில்லை என்றும், எழுதப்படாத வெள்ளை தாளில் தான் அவர்களிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டதாக அவர்களது சாட்சியத்தில் கூறியிருக்கிறார்கள்

என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் தங்கள் முன்னிலையில் எதுவும் கைப்பற்றவில்லை என அவர்களது சாட்சியத்தில் கூறியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை, சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்தே ஆவணங்களை தயார் செய்து கொணடேன் என்றாலும் சரியல்ல. அசா1 முதல் அசா3 வரையிலானவர்கள் வழக்கில் குறிப்பிட்டுள்ளது போன்ற சம்பவம் நடைபெறவில்லை, எழுதப்படாத வெள்ளை தாளில் தான் அவர்களிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டதாக அவர்களது சாட்சியத்தில் கூறியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொல்லும் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவர்களிடம் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) லூர்து ஜெயராஜ்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.